**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 282/2018**

**PROSECUTION WITNESS NO. 3**

| | |
|---|---|
| **Name** : ரெங்கராஜ் | **Caste** : |
| **Father's/Husband Name** : அடைக்கலம் | **Religion** : இந்து |
| **Village** : வெவ்வயல் பட்டி, திருமலைராயபுரம் | **Calling** : விவசாயம் |
| **Taluk** : குளத்தூர் தாலுக்கா, புதுக்கோட்டை | **Age** : **48/2023** |

**(Accused 1,2 Present.)**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.08.2023**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி எஸ். ஜெயந்தி, பெஞ்ச் கிளார்க் கிரேடு 3, திருமதி. எம். உதயராணி, தட்டச்சர்**

**C.C.No. 282/2018 07.08.2023 விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 11.45**

## முதல் விசாரணை:

**1.** நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 பூமா என்பவரை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையது. (**ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) கடந்த 18.04.2013 ஆம் தேதி மாலை 04.00 மணியளவில் பிறப்பு சான்றிதழ் வாங்கிவதற்காக நாகராஜ் என்பவர் மாத்தூரில் சுகுமாறன் என்பவரிடம் சென்றதாகவும், அது தொடர்பாக புதுக்கோட்டை மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் நாகராஜ் வீட்டிற்கு வந்திருந்தார்கள்.

2. நான் நாகராஜ் வீட்டிற்கு பக்கத்து வீட்டில் குடியிருந்து வருகிறேன். ராசு (எ) அந்தோணிசாமி என் வீட்டிற்கு வந்திருந்தார். அந்த சமயத்தில் போலீசார் வந்திருந்தார்கள். நாங்கள் நாகராஜ் வீட்டிற்கு சென்ற விசாரித்த போது நாகராஜுக்கு போலியாக பிறப்பு சான்றிதழ் சுகுமார் வாங்கிக் கொடுத்ததாக நாகராஜ் கூறினார். இது சம்பந்தமாக போலீசார் என்னிடம் சாட்சி கையெழுத்து கேட்டார்கள். நான் கையெழுத்து செய்தேன். என்னுடன் அந்தோணிசாமி சாட்சி கையெழுத்து செய்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**C.C.No. 282/2018    07.08.2023**

**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

**3.** புதுக்கோட்டை போலீசார் என்னிடம் கையெழுத்து பெற்று விசாரித்த பிறகு மீண்டும் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

**2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

போதிய கால அவகாசம் கொடுத்தும் 2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. எனவே குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.